06.05.2015

# இன்றைய வேளாண் செய்திகள்

## பனை வெல்லம் விற்பனை "ஜோர்'

திருக்கோவிலூர்: திருக்கோவிலூரில் பனைவெல்ல வியாபாரிகள் முகாமிட்டு விற்பனை செய்து வருகின்றனர். பனைவெல்லம் பண்டைய காலத்தில் உடல் ஆரோக்கியத்திற்கு உணவு பொருளாக சேர்த்துக் கொள்ளப்பட்டது. இனிப்பு சுவை மிக்க இதனை, பொட்டுக்கடலை உள்ளிட்ட பொருட்களுடன் கலந்து சாப்பிடுவர். மருத்துவ குணம் கொண்ட இதனை, கர்ப்பிணி தாய்மார்களுக்கு பாலுடன் கலந்து கொடுத்து வந்தால் சுகபிரவம் ஏற்படும். குழந்தைக்கு ஊட்டச்சத்து குறைபாடு, ரத்தசோகை நோய்கள் ஏற்படாது. ரசாயன கலப்பு இல்லாமல் இயற்கையாக கிடைக் கும் பனை வெல்லத்தை, கருப்பட்டி என்றும் அழைக்கின்றனர். தற்போது பனை வெல்லம் சீசன் துவங்கியிருப்பதால், தூத்துக்குடி மாவட் டத்தை சேர்ந்த குழுவினர், திருக்கோவிலூரில் முகாமிட்டு சாலையோரங்களில் கூடையில் வைத்து விற்பனை செய்கின்றனர். கிலோ 120 ரூபாய் என விற்பனை செய்யப்படுகிறது. சிறு துண்டுகளாக இருக்கும் அச்சு வெல்லமும் விற்பனை செய்யப்படுகிறது.

## சின்னசேலம் கமிட்டிக்கு மக்காசோளம் அதிக வரத்து

சின்னசேலம்: சின்னசேலம் மார்க்கெட் கமிட்டிக்கு மக்காசோளம் வரத்து அதிகரித்தது. சின்னசேலம் மார்க்கெட் கமிட்டிக்கு நேற்று முன்தினம் 355 மூட்டைகள் மக்காசோளம் விற்பனைக்கு வந்தது. அதிகபட்ச விலை 1339 ரூபாய்க்கும், குறைந்தபட்ச விலை 1265 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டது. இதேபோல் 45 எள் மூட்டைகள் விற்பனைக்கு வந்தது.

அதிகபட்ச விலையாக 4,893 ரூபாய், குறைந்தபட்சமாக 3850 ரூபாய் என கொள்முதல் செய்யப்பட்டது. கடந்த வாரம் 700 மக்காசோள மூட்டைகள் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டு, 9 லட்சத்து 24 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனையானது. இதேபோல் 75 எள் மூட்டைகள், 3 லட்சத்து 68 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது.

### மேட்டூர் அணை நீர்திறப்பு; 1,000 கனஅடியாக குறைப்பு

மேட்டூர் : மேட்டூர் அணையில் இருந்து, டெல்டா மாவட்ட குடிநீர் தேவைக்காக, காவிரியாற்றில் வினாடிக்கு, 300 கனஅடி நீர்திறக்கப்பட்டது.சென்னை மாநகர குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் வீராணம் ஏரியை நிரப்புவதற்காக, மேட்டூர் அணை நீர்திறப்பு, கடந்த, 25ம் தேதி வினாடிக்கு, 6,000 கனஅடியாக அதிகரிக்கப்பட்டது.வீராணம் ஏரியை தண்ணீர் சென்றடைந்ததை தொடர்ந்து, மேட்டூர் அணை நீர்திறப்பு கடந்த, 1ம் தேதி வினாடிக்கு, 3,000 கனஅடியாகவும், நேற்று வினாடிக்கு, 1,000 கனஅடியாகவும் குறைக்கப்பட்டது. நேற்று அணை நீர்மட்டம், 67.230 அடியாகவும், நீர்இருப்பு, 30.368 டி.எம்.சி.,யாகவும் இருந்தது. வினாடிக்கு, 1,298 கனஅடி நீர் அணைக்கு வந்தது கொண்டிருந்தது.

### தி காவிரி கல்லூரி மாணவர்கள் விவசாய கருவி கண்டுபிடிப்பு

சேலம் : தி காவிரி பொறியியல் கல்லூரியின், இயந்திரவியல் துறையில் பயிலும், குருபிரசாத், அஜேஷ் ஜாய், நவின், நெல்சன், பென்னி ஆகியோர் இணைந்து, "அஞ்ஞாணிணணிட்டிஞி ஙஹுஞாண்ச்tடிடூஹு' என்ற இயந்திரத்தை உருவாக்கி உள்ளனர். இதன் மூலம், நிலத்தில் உழவு செய்தல், விதை விதைத்தல், விதை போட்ட பிறகு மண்ணை மூடல், மருந்து தெளித்தல் உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ள முடியும்.சிறு விவசாயிகள் பயன்பெறும் வகையில், இவ்வியந்திரம் பயனுள்ளதாக அமையும். இதை கண்டுபிடிக்க உதவிய துறைத் தலைவர் பெஞ்சமின்

லாசரஸ்க்கு, மாணவர்கள் நன்றி தெரிவித்தனர்.முன்னதாக, அறக்கட்டளையின் கவுரவ தலைவர் நடேசன், தலைவர் அன்பழகன், துணைத் தலைவர் மதன், கார்த்திக், செயலாளர் இளங்கோவன், தாளாளர் ராமநாதன், செயல் இயக்குனர் கருப்பண்ணன், ஒருங்கிணைப்பாளர் ரேவதி, டீன் ஓபுளி, கல்லூரியின் முதல்வர் வெங்கடாசலம், பேராசிரியர் ஆகியோர், மாணவர்களுக்கு பாராட்டு தெரிவித்தனர்.

## 2,600 டன் மக்காச்சோளம் வருகை

நாமக்கல் : நாமக்கல் ரயில்வே ஸ்டேஷனுக்கு, ஆந்திர மாநிலம் தெனாலியில் இருந்து, 2,600 டன் மக்காச்சோளம் வந்ததை, லாரிகள் மூலம் சம்பந்தப்பட்ட குடோனுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.தமிழகம் மட்டுமின்றி, ஆந்திரா, கர்நாடகா, பீஹார் உள்ளிட்ட மாநிலங்களில் இருந்து, அரிசி, கோதுமை, மக்காச்சோளம் போன்ற அத்தியாவசிய பொருட்கள் மற்றும் கால்நடைகளுக்கு தேவையான தீவன பொருட்கள், சரக்கு ரயில் பெட்டிகள் மூலமாக ஏற்றி வந்து, நாமக்கல் ரயில்வே ஸ்டேஷனில் இறக்கி வைக்கப்படுகிறது.அவை, சம்பந்தப்பட்ட அரசு மற்றும் தனியார் குடோன்களுக்கு, லாரிகள் மூலம் எடுத்துச் செல்லப்பட்டு, அரவை நிறுவனங்களுக்கு அனுப்பப்படுகிறது. இந்நிலையில், நேற்று, ஆந்திரா மாநிலம், தெனாலியில் இருந்து, சரக்கு ரயில் மூலம், 41 பெட்டிகளில், 2,600 டன் மக்காச்சோளம், நாமக்கல் ரயில்வே ஸ்டேஷன் வந்ததது.அதை தொடர்ந்து, அவை லாரிகள் மூலம், சம்பந்தப்பட்ட குடோனுக்கு ஏற்றிச் செல்லப்பட்டு இருப்பு வைக்கப்பட்டது.

## ஆபத்து! : தென்னையை தாக்கும் கருத்தலை புழுவால்... : முன்னெச்சரிக்கை நடவடிக்கைக்கு அழைப்பு

தர்மபுரி: தென்னை மரங்களில் கருத்தலைப் புழு தாக்குதல் காரணமாக, உற்பத்தி பாதிக்கப்படுவதுடன், மரங்கள் அழியும் அபாயம் ஏற்பட்டுள்ளதால், அதை கட்டுப்படுத்த, முன்னெச்சரிக்கை நடவடிக்கை தேவை என, வேளாண் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.தர்மபுரி மாவட்டத்தில், மா, கரும்பு, மஞ்சள், தென்னை உள்ளிட்டவை சாகுபடி செய்யப்படுகிறது. குறிப்பாக, தர்மபுரி, பாலக்கோடு, மாரண்டஹள்ளி, காரிமங்கலம், பென்னாகரம், பாப்பிரெட்டிப்பட்டி உள்ளிட்ட பகுதியில், ஒன்பது ஆயிரத்து, 700 ஹெக்டேரில், தென்னை சாகுபடி செய்யப்பட்டுள்ளது.மாவட்டத்தில், போதிய பருவமழையில்லாததால், தென்னை விவசாயிகள் பாதிக்கப்பட்டு வந்தனர். இந்நிலையில், விவசாயிகளை மேலும் கவலை அடைய செய்யும் வகையில், மாவட்டம் முழுவதும் பரவலாக, கடந்த, சில மாதங்களாக, ஆயிரிக்கணக்கான தென்னை மரங்களில், கருத்தலைப் புழுக்கள் தாக்குதல் அதிகரித்துள்ளது.இதனால், தென்னங்கீற்றுகள் பசுமை இழந்து காணப்படுவதுடன், தென்னை மரம் முற்றிலும் பாதிக்கப்பட்டு வருகிறது. மேலும், அருகில் உள்ள மரங்களுக்கும், கருத்தலைப் புழு தாக்குதல் தீவிரமாக பரவி வருகிறது. தேங்காய்க்கு சந்தையில் நல்ல விலை கிடைத்து வரும் வேலையில், தென்னையில் தாக்குதல் ஏற்பட்ட காரணமாக தேங்காய் உற்பத்தி பாதிக்கப்பட்டு வருவதால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.வேளாண்மை அலுவலர்கள் கூறியதாவது:தென்னை மரங்களில், கருந்தலைப் புழு தாக்கப்பட்ட, கீழ் அடுக்கில் உள்ள தென்னங்கீற்றுக்களை வெட்டி எரித்து விடவேண்டும். புழு தாக்குதல் அதிகமாக இருக்கும் போது, ஒரு லிட்டர் தண்ணீரில், இரண்டு மில்லி டை குளோர்வாஸ் அல்லது, 5 மில்லி மாலத்தியான்

மருந்தினை, ஒரு மில்லி ஒட்டும் திரவத்துடன் கலந்து தெளிக்க வேண்டும். புழுக்கள், மிக அதிகளவில் தாக்கப்பட்ட மரங்களின் நன்கு வளர்ந்த இளஞ்சிவப்பு நிறமுள்ள வேரினை சாய்வாக வெட்டிய பின், துளைகள் இல்லாத பாலிதீன் பையில், 10 மில்லி தண்ணீருடன், 10 மில்லி மானோகுரோடோபாஸ் மருந்தை கலந்து வேரில் கட்டிவிட வேண்டும்.மேலும், 25 நாட்களுக்கு பின், கருந்தலைப் புழுவின், புழு பருவத்தை கட்டுப்படுத்த, ஒரு மரத்திற்கு பிரகானிட், 20, பெத்லிட், 10 ஒட்டுண்ணிகளை வி ட வேண்டும். மேலும், 15 நாட்களுக்கு ஒரு முறை வீதம், ஐந்து அல்லது, ஆறு முறை ஒட்டுண்ணிகளை விடுவதன் மூலம், கட்டுபடுத்தலாம். மேலும், அருகில், வேளாண்மை விரிவாக்க மைய அலுவலத்தை தொடர்பு கொண்டு, தேவையான ஆலோசனை மற்றும் உதவிகளை பெறலாம்.இவ்வாறு அவர்கள் கூறினார்.

**ரப்பர் இறக்குமதிக்கான வரி உயர்வுக்கு வரவேற்பு**

குன்னுார் : ரப்பர் இறக்குமதிக்கான வரியை, 20 சதவீதத்தில் இருந்து, 25 சதவீதமாக மத்திய அரசு உயர்த்தியுள்ளதற்கு, 'உபாசி' வரவேற்பு தெரிவித்துள்ளது.தென்னிந்திய தோட்ட அதிபர்கள் சங்கம் (உபாசி) துணைத் தலைவர் தர்மராஜ் கூறியதாவது: கடந்த நிதியாண்டில் அதிக ரப்பர் இறக்குமதி காரணமாக, தோட்ட அதிபர்கள், தொழிலாளர்கள், ரப்பருக்கு போதிய விலை கிடைக்காமல் சிரமத்துக்கு உள்ளாகியுள்ளனர். இறக்குமதியை கட்டுப்படுத்துமாறு, உபாசி மற்றும் தோட்ட நிர்வாகிகள், தொழிலாளர்கள் வலியுறுத்தி வந்தனர். இந்நிலையில், ரப்பர் இறக்குமதிக்கான வரியை, 20 சதவீதத்தில் இருந்து, 25 சதவீதமாக மத்திய அரசு உயர்த்தியுள்ளது. நாடு முழுவதும் உள்ள அனைத்து தோட்ட அதிபர்கள், தொழிலாளர்களிடையே வரவேற்பை அளித்துள்ளது. தாமதமாக வெளியான அறிவிப்பு என்றாலும், ரப்பர் தோட்ட தொழில், இனி மேம்படும் சூழ்நிலை உருவாகியுள்ளது. உள்நாட்டு ரப்பர்

தயாரிப்புகளுக்கு முறையான வர்த்தக விலை நிர்ணயிக்க வேண்டும்.உற்பத்தி மற்றும் நுகர்வு இடைவெளியை கட்டுப்படுத்தும் அளவில் மட்டுமே, இறக்குமதிக்கு அனுமதிக்க வேண்டும்.இவ்வாறு, தர்மராஜ் கூறியுள்ளார்.

**மழையின்றி வறட்சியால் கோரை சாகுபடி அதிகரிப்பு**

கரூர்: கரூர் மாவட்டத்தில், மீண்டும் வறட்சி நிலை ஏற்பட்டுள்ளதால், கோரை புல் சாகுபடி பரப்பளவு உயர்ந்துள்ளது. குறைந்த செலவில் அதிக லாபம் தரும் கோரை பயிரை சாகுபடி செய்வதில், கரூர் மாவட்ட விவசாயிகள் ஆர்வத்துடன் ஈடுபட்டுள்ளனர்.கரூர் மாவட்டத்தில், கடந்த ஆண்டு தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழை ஓரளவு பெய்தது. கடந்த சில நாட்களாக வெயிலில் தாக்கம், 100 டிகிரியை கடந்துள்ளது. கரூர் மாவட்ட விவசாயத்தின் ஜீவாதாரமாக விளங்கும் காவிரியாற்றில் குடிநீருக்காக, தற்போது தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. அமராவதி ஆற்றில் சாயக்கழிவு பாதிப்பு மற்றும் தண்ணீர் இல்லாத நிலை உள்ளது. இதனால், நிலத்தடி நீரும் நாளுக்கு நாள் குறைந்து வருகிறது. போதிய தண்ணீர் இல்லாததால், நெல், வாழை, கரும்பு, மஞ்சள் உள்ளிட்ட பணப்பயிர்களை பயிரிடுவதில் பெரும் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இருப்பினும், குறைந்த முதலீட்டில் அதிக லாபத்தை நீண்ட காலம் அளிக்கும் கோரை புல் சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம் காட்டத் துவங்கி உள்ளனர். கரூர் மற்றும் சுற்று வட்டார பகுதிகளான வாங்கல், என்.புதூர், பிச்சம் பாளையம், கடம்பங்குறிச்சி, தளவாய்பாளையம், தோட்டக்குறிச்சி, நெரூர், மரவாப்பாளையம், புதுப்பாளையம், திருமாக்கூடலூர், அச்சமாபுரம், சோமூர், வேலாயுதம்பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் கோரை பயிர் அதிகளவில் சாகுபடி செய்யப் படுகிறது.ஒருமுறை சாகுபடி செய்து விட்டால் போதும், குறைந்தபட்சம், 30 ஆண்டுகள் வரை, ஆறு மாதத்துக்கு ஒருமுறை கோரை பயிரை அறுவடை செய்யலாம். அதிகளவில் தண்ணீர், உரம் மற்றும் பராமரிப்பு

செலவில்லாத கோரை பயிர், கரூர் அமராவதி மற்றும் காவிரியாற்று பகுதிகளில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. கரூர் நெரூரை சேர்ந்த கோரை பயிர் விவசாயிகள் கூறுகையில், "கரூர் மாவட்டத்தில் மீண்டும் வறட்சியான நிலை உள்ளதால், பயிர் சாகுபடி இல்லை. காவிரி ஆற்றின் கரையோரப்பகுதியில் கோரை பயிர்கள் சாகுபடி அதிகளவில் துவங்கியுள்ளது, கான்கிரீட் அமைக்கவும், திரைச்சீலை, நாற்காலிகள் செய்யவும் கோரை பயன்படுத்தப்படுகிறது. கோரை பயிரை கொண்டு பாய்கள் அதிகளவில் தயாரிக்கப் படுகிறது. கரூர் மாவட்டத்தை பொறுத்தவரை கட்டிட பணிகள் அதிகளவில் நடந்து வருவதால், கோரை பயிர்களுக்கு நல்ல கிராக்கி உள்ளது,' என்றனர்.

## இளைஞர்களை முன்னோடி விவசாயிகளாக்க திட்டம்

சின்னமனூர்: அடுத்த ஐந்து ஆண்டுகளில் 25 ஆயிரம் இளைஞர்களை முன்னோடி விவசாயிகளாக திறன் உயர்த்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக, வேளாண் விஞ்ஞானி பரசுராமன் தெரிவித்தார். தேனி அருகே கோட்டூரில் விவசாயத்துறையில் இளைஞர் திறன் மேம்பாட்டு பயிற்சி முகாம் நடந்தது. கலெக்டர் வெங்கடாச்சலம் தலைமை வகித்தார். தமிழக விவசாயத்துறை இயக்குனர் ராஜேந்திரன், வேளாண் விஞ்ஞானி பரசுராமன் உள்ளிட்டோர் திறன் மேம்பாடு குறித்த விளக்கமளித்தனர். விவசாயத்துறை இயக்குனர் பேசியதாவது: உணவு உற்பத்தியில் தன்னிறைவை எட்டியுள்ளோம். கடந்தாண்டு 123 லட்சம் மெட்ரிக் டன் உணவு உற்பத்தியை தொழில் நுட்பத்தை புகுத்தி சாதித்துள்ளோம். ஒருங்கிணைந்த பண்ணையம் அமைத்தால் நல்ல லாபம் கிடைக்கும். செயற்கை உரங்களை தவிர்த்து, இயற்கை விவசாயத்தில் நல்ல லாபம் பார்க்கலாம். வயலை சுற்றி பூச்செடி வளர்ப்பதால் நன்மை செய்யும் பூச்சிகளான சிலந்தி, வண்ணத்து பூச்சி, தேனீக்கள் தங்கும். இவற்றால் உணவு உற்பத்தி அதிகரிக்கும், என்றார். வேளாண் விஞ்ஞானி பரசுராமன் பேசுகையில், ""விவசாயத்தில் இளைஞர்களை

அதிகளவில் ஈடுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளது. அடுத்த 5 ஆண்டுகளில் 25 ஆயிரம் இளைஞர்களை முன்னோடி விவசாயிகளாக மாற்ற திறன் மேம்பாடு பயிற்சி தொடர்ச்சியாக வழங்கப்படும்," என்றார். விவசாயி ஜெயக்குமார் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

**வால்பாறையில் பலத்த மழை**



வால்பாறையில் நேற்று பலத்த மழை பெய்தது.தொடரும் மழை வால்பாறை மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் கடந்த சில நாட்களாக பலத்த மழை பெய்து வருகிறது. மழையினால் ஒரு சில இடங்களில் லேசான மண்சரிவு ஏற்பட்டது. மேலும் அணைகளுக்கு தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது. இந்த நிலையில் நேற்று காலை முதல் வால்பாறை மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் வெயில் அடித்தது. பின்னர் மதியம் 12 மணிக்கு மேல் மழை மேகங்கள் சூழ்ந்தன. இதைத்தொடர்ந்து மதியம் 2 மணிக்கு மழை பெய்ய தொடங்கியது. நேரம் செல்ல, செல்ல மழையின் வேகம் அதிகரித்தது. இதனால் சாலைகளிலும், தாழ்வான பகுதிகளிலும் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. மாலை 4 மணிவரை 2 மணி நேரம் பலத்த காற்றுடன் மழை பெய்ததால் ஒரு சில இடங்களில் மின் தடை ஏற்பட்டது. குளு, குளு காலநிலை

நேற்று மழை பெய்த போது அண்ணா நகர் முத்துமாரியம்மன் கோவிலுக்கு பெண் பக்தர்கள் முளைப்பாரி எடுத்து சென்றனர். அப்போது அவர் கள் கனமழையையும் பொருட்படுத்தால் மழையில் நனைந்தபடி முளைப்பாரி எடுத்து சென்றதை பலரும் ஆச்சரியத்துடன் பார்த்தனர். வால்பாறை பகுதியில் வெப்பம் குறைந்து குளு, குளு கால நிலை நிலவுகிறது. இந்த கால நிலை சுற்றுலா பயணிகளுக்கு உகந்ததாக இருப்பதால், அவர்கள் வால்பா றைக்கு அதிகளவில் வருகிறார் கள். மேலும் ஆண்டுதோறும் மே மாதம் கோடையின் வெப்பம் அதிகரிக்கும் போது, தேயிலை செடிகளை சிவப்பு சிலந்தி, தேயிலைக் கொசு ஆகியவை தாக்கி மகசூலை பாதிப்படைய செய்யும். ஆனால் தற்போது பெய்துவரும் கனமழையினால் சிவப்புசிலந்தி பூச்சி உள்பட பல்வேறு பூச்சிகளின் தாக்குதல் குறைந்துள்ளதால் பச்சை தேயிலை உற்பத்தி அதிகரித்து காணப்படுகிறது.

**தஞ்சையில் இருந்து விழுப்புரத்துக்கு அரவைக்காக 1,900 டன் நெல் சரக்கு ரெயிலில் அனுப்பி வைக்கப்பட்டது**




தஞ்சையில் இருந்து விழுப்புரத்துக்கு சரக்கு ரெயிலில் 1,900 டன் நெல் அரவைக்காக அனுப்பப்பட்டது. நெற்களஞ்சியம்

தமிழகத்தின் நெற்களஞ்சியமாக தஞ்சை மாவட்டம் விளங்கி வருகிறது. இங்கு குறுவை, சம்பா, தாளடி என 3 போகம் நெல்சாகுபடி நடைபெறும். இது தவிர கோடை நெல் சாகுபடியும் நடைபெறுவது வழக்கம். தஞ்சை மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் நெல், தமிழ்நாடு அரசு நுகர்பொருள் வாணிப கழகத்தின் மூலம் கொள்முதல் செய்யப்படும். அவ்வாறு கொள்முதல் செய்யப்படும் நெல் மூட்டைகள் தஞ்சையில் உள்ள நுகர்பொருள் வாணிப கழகத்துக்கு சொந்தமான சேமிப்புக்கிடங்குகளில் இருப்பு வைக்கப்படுவதோடு, தமிழகத்தில் திருவள்ளூர், மதுரை, சென்னை, விழுப்புரம், புதுக்கோட்டை உள்பட பல்வேறு மாவட்டங்களுக்கு அரவைக்காக அனுப்பி வைக்கப்படும். இந்த நெல் மூட்டைகள் சரக்கு ரெயில்களிலும், லாரிகள் மூலமாகவும் அனுப்பி வைக்கப்படும்.1,900 டன் தற்போது தஞ்சை மாவட்டத்தில் அறுவடை செய்யப்பட்ட சம்பாசாகுபடி நெல் கொள்முதல் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. இவ்வாறு கொள்முதல் செய்யப்பட்ட நெல்மூட்டைகள், சேமிப்புக்கிடங்குகளில் இருந்தும், கொள்முதல் நிலையங்களில் இருந்தும் லாரிகளில் ஏற்றப்பட்டு தஞ்சை ரெயில் நிலையத்துக்கு கொண்டுவரப்பட்டன. 1,900 டன் நெல் மூட்டைகள் சரக்கு ரெயிலில் 42 பெட்டிகளில் ஏற்றப்பட்டு விழுப்புரத்துக்கு அரவைக்காக அனுப்பி வைக்கப்பட்டன.

**விவசாய நிலங்களில் நன்மை செய்யும் பூச்சிகளை வளர்க்க விரைவில் புதிய திட்டம் வேளாண்மை இயக்குனர் ராஜேந்திரன் தகவல்**



விவசாய நிலங்களில் நன்மை செய்யும் பூச்சி இனங்களை வளர்ப்பதற்கான புதிய திட்டம் விரைவில் செயல்படுத்தப்பட உள்ளதாக வேளாண்மைத்துறை இயக்குனர் ராஜேந்திரன் தெரிவித்தார்.

இளைஞர்களுக்கு பயிற்சி தேனி அருகே கோட்டூரில், தமிழ்நாடு அரசு வேளாண்மைத்துறை மற்றும் எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் இணைந்து வேளாண்மையில் இளைஞர் மற்றும் இளம்மகளிருக்கான திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்பட்டது. 2 நாட்களுக்கான இந்த பயிற்சியின் தொடக்க விழாவுக்கு தேனி மாவட்ட கலெக்டர் வெங்கடாசலம் தலைமை தாங்கி, பயிற்சியை தொடங்கி வைத்து பேசினார். விழாவில் தமிழ்நாடு வேளாண்மைத்துறை இயக்குனர் ராஜேந்திரன் கலந்து கொண்டு அங்கு அமைக்கப்பட்டு இருந்த கண்காட்சியை தொடங்கி வைத்து பேசினார். அவர் பேசும் போது கூறியதாவது:– தேனி மாவட்டம் ஒரு விவசாயம் சார்ந்த மாவட்டம் ஆகும். ஒரு காலத்தில் தேனி மாவட்டத்தில் சட்டம், ஒழுங்கு பிரச்சினைகள் அதிக அளவில் நடந்தன. அப்போது மக்களுக்கு விவசாயத்தில் அதிக வேலை இல்லை. இதனால் அதிக அளவில் தடுப்பணைகள் அமைக்கப்பட்டதால் கிணறுகளின் நீர்மட்டம் உயர்ந்ததோடு, மக்களுக்கு அதிக அளவில் வேலை வாய்ப்புகளும் உருவானது. இதன் விளைவாக சட்டம்–ஒழுங்கு பிரச்சினைக்கு தீர்வு

கிடைத்தது. ஒருங்கிணைந்த மதுரை மாவட்டமாக இருந்ததை விட தற்போது தேனி மாவட்டத்தில் உணவுப் பொருட்கள் உற்பத்தி அதிகரித்து உள்ளது. கடந்த ஆண்டு தேனி மாவட்டத்தில் உணவு உற்பத்தி 2 லட்சம் மெட்ரிக் டன்னாக இருந்தது. அடுத்த ஆண்டு 5 லட்சம் மெட்ரிக் டன் வரை உற்பத்தி கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பு உள்ளது.

<u>நன்மை செய்யும் பூச்சிகள்</u> விவசாய நிலங்களுக்கு பாம்பு, ஆந்தை, மண்புழு போன்றவை உற்ற நண்பர்கள். ஆனால் இந்த உயிரினங்கள் அழிந்து வருகின்றன. பாம்பும், ஆந்தையும் இருந்தால் எலிகள் தொல்லை கட்டுப்படுத்தப்படும். ஒரு ஆண் எலியும், ஒரு பெண் எலியும் சேர்ந்தால் 1½ ஆண்டுகளில் 1,200–க்கும் மேற்பட்ட எலிகளை உற்பத்தி செய்துவிடும். எலிகளை மருந்து வைத்து கட்டுப்படுத்தாமல், சுற்றுச்சூழலுக்கு உகந்த வகையில் இயற்கையான முறையில் கட்டுப்படுத்தும் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. விவசாய நிலங்களுக்கு நன்மை செய்யும் பூச்சிகள் தேவை. இதற்காக விவசாய நிலத்தை சுற்றிலும் பூச்செடிகள் வளர்த்து தேனீ, சிலந்தி, வண்ணத்துப்பூச்சி போன்ற நம்மை செய்யும் பூச்சிகளை வளர்க்கலாம். இதன் மூலம் தீமை செய்யும் பூச்சி இனங்களை அழிக்க முடியும். இந்த நன்மை செய்யும் பூச்சி இனங்களை வளர்க்கும் வகையில் புதிய திட்டம் விரைவில் செயல்படுத்தப்பட உள்ளது. இவ்வாறு வேளாண்மைத்துறை இயக்குனர் ராஜேந்திரன் பேசினார். விழாவின் போது வேளாண்மை சார்ந்த 7 மகளிர் குழுக்களுக்கு தலா ரூ.10 ஆயிரம் வீதம் ரூ.70 ஆயிரம் சுழல் நிதிக்கான காசோலைகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் வெங்கடசுப்பிரமணியன், மா.ச.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவன முதன்மை விஞ்ஞானி பரசுராமன், தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதல்வர் சேகர், மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) ரெங்கநாதன், வேளாண்மை தரக்கட்டுப்பாடு உதவி இயக்குனர்

ஜெயபாண்டியன் உள்பட பலர் கலந்து கொண்டனர். முடிவில் உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை துறை இயக்குனர் நாட்ராயன் நன்றி கூறினார்.

**தாராபுரம் பகுதிகளில் சின்ன வெங்காயம் சாகுபடிக்கு மாறி விட்ட விவசாயிகள் குறைந்த நாட்களில் அதிக வருவாய் கிடைப்பதால் ஆர்வம்**



தாராபுரம், தாராபுரம் பகுதியில் பெரும்பாலான விவசாயிகள் சின்ன வெங்காயம் சாகுபடிக்கு மாறிவிட்டனர்.விவசாயம் தாராபுரம் மற்றும் அதை சுற்றி உள்ள கிராமப்புறங்களில் நெல், கரும்பு ஆகிய சாகுபடிக்கு அடுத்தபடியாக மக்காச்சோளம், தக்காளி, வெண்டை, கத்தரி, மற்றும் இதர காய்கறிகள் பயிர்சாகுபடி செய்தனர். இதில் கரும்பின் அறுவடை காலம் 10 மாதங்களாகும். கரும்பு நடவு செய்த நாளில் இருந்து அறுவடை வரை இடைப்பட்ட நாட்களில் கரும்பு பயிரை நோய் தாக்கினாலோ அல்லது தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டாலோ இதற்கு முதலீடு செய்யப்பட்ட தொகை அனைத்தும் வீணாகி விடும். கரும்பு சாகுபடி செய்து 8 மாதங்கள் முடிந்த நிலையில் கடைசி 2 மாதத்தில் தண்ணீர் பாய்ச்ச முடியவில்லை என்றால் பெருத்த நஷ்டம் ஏற்படும். அதுபோல் 100 முதல் 110 நாட்கள் கொண்ட நெல்சாகுபடிக்கு கதிர்வரும் வரும் வரை வயலில் தண்ணீர் நிற்க வேண்டும். நெற்கதிர்கள் வந்து பாலடைக்கும் நேரத்தில் தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டால், நெல்பயிர் முற்றிலும் கருகிப்போகும். இதுபோன்ற பல்வேறு காரணங்களால் விவசாயிகள் மக்காச்சோளம் சாகுபடிக்கு மாறினார்கள்.

சின்ன வெங்காயம் மக்காச்சோளம் சாகுபடி செய்தாலும் கத்தரி, தக்காளி, வெண்டை ஆகிய காய்கறி பயிர்களும் சாகுபடி செய்தனர். இதற்கு பராமரிப்பு செலவு அதிகமானதால் விவசாயிகளுக்கு கட்டுபடியாகவில்லை. எனவே குறைந்த நாட்களில் அதிக லாபம் தரக்கூடிய சின்ன வெங்காயம் சாகுபடிக்கு பெரும்பாலான விவசாயிகள் மாறி விட்டனர். சின்ன வெங்காயம் நடவு செய்த நாட்களில் இருந்து 70–வது நாள் அறுவடை செய்யலாம். மேலும் வாரம் ஒருமுறை தண்ணீர் பாய்ச்சினால் போதுமானது. அறுவடை செய்த பின்னர் வெங்காயத்தை விற்பனை செய்தால் பணமும் மொத்தமாக கிடைக்கும். எனவே தாராபுரம் பகுதி விவசாயிகள் சின்ன வெங்காயம் சாகுபடிக்கு மாறிவிட்டனர்.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**ஒட்டன்சத்திரம் சந்தைக்கு மாங்காய் வரத்து அதிகரிப்பு**

ஒட்டன்சத்திரம் காய்கறி சந்தைக்கு ஈரோடு, வெள்ளக்கோவில், நத்தம், கோபால்பட்டி, கொசவபட்டி, ஆயக்குடி ஆகிய பகுதிகளில் இருந்து தினசரி 25 டன்களுக்கும் அதிகமாக கல்லாமை மாங்காய் கொண்டு வரப்படுகின்றன. மாங்காய் வரத்து அதிகரித்து உள்ளதால் அவற்றின் விலையும் சரிந்துள்ளது. கடந்த வாரம் ஒரு கிலோ கல்லாமை மாங்காய் ரூ.17க்கு விற்பனையானது. திங்கள்கிழமையன்று வரத்து அதிகரித்த நிலையில் விலை ரூ.11 ஆக குறைந்துள்ளது. இதுகுறித்து மாங்காய் வியாபாரி சாதிக்பாட்சா கூறியது: கோடை மழையின் காரணமாக மாங்காய் வரத்து அதிகரித்து உள்ளது. சில நாள்களில் வரத்து குறைந்து விடும். கடந்த 2 ஆண்டுகளாக போதிய மழை இல்லாததால் ஏராளமான மாமரங்கள் காய்ந்து விட்டன. இதனால் வரும் வாரங்களில் மாங்காய் விலை உயரும் என்றார்.

**முடுக்கன்குளத்தில் இ சேவை மையம் திறப்பு**

காரியாபட்டி அருகே முடுக்கன்குளம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் இசேவை மையம் செவ்வாய்க்கிழமை திறக்கபட்டது.

கூட்டுறவு வங்கித் தலைவர் ராஜராஜன் தலைமை வகித்தார். மாவட்டக் கூட்டுறவு இணைப்பதிவாளர் குருமூர்த்தி மையத்தை தொடங்கி வைத்து பயனாளிகளுக்கு சான்றிதழ்களை வழங்கினார். இந்த மையத்தில் சாதிச் சான்றிதழ், வாரிசுச் சான்றிதழ், வருமானம் மற்றும் சமூக நலத்துறை வழங்கும் சான்றிதழ்கள் அனைத்தும் பெற்றுக்மகொள்ளும் வசதி உள்ளது.

**"சிறு தானியங்களைப் பயிரிட்டால் உணவு தானிய உற்பத்தி அதிகரிக்கும்'**

தானியங்களைப் பயிர் செய்வதன் மூலம் உணவுத் தானிய உற்பத்தி அதிகமாகும். மேலும், கூடுதல் வருமானமும் கிடைக்கும் என்று வேளாண்மைத் துறை உதவி இயக்குநர் ஏ.எம்.சாந்தி கூறினார்.

தரிசு நிலங்களை விளைநிலங்களாக மாற்றுவது குறித்து, மேற்கு ஆரணி வட்டார வேளாண்மை விரிவாக்க மையம் சார்பில் வண்ணாங்குளம், தேவிகாபுரம் பகுதி விவசாயிகளுக்கு திங்கள்கிழமை பயிற்சி அளிக்கப்பட்டது. இந்த முகாமுக்கு வேளாண்மை உதவி இயக்குநர் ஏ.எம்.சாந்தி தலைமை வகித்து பேசியதாவது: நடப்பு தரிசாக உள்ள விவசாய நிலங்களில் பயிர் சாகுபடி செய்யலாம். இந்த நிலங்களில் குறைந்த நீர்த்தேவை, குறைந்த சாகுபடி செலவு கொண்ட பயிர்களான உளுந்து, மணிலா, சிறுகுறு தானியங்கள் பயிர் செய்வதன் மூலம் உணவுத் தானிய உற்பத்தி அதிகமாகும். மேலும், விவசாயிகளுக்கு கூடுதல் வருமானம் கிடைக்கும் என்றார். வேளாண்மை அலுவலர்

எஸ்.கீதா, துணை அலுவலர் வேலு, உதவி அலுவலர்கள் நந்தகோபால், ஜெய்சங்கர், சண்முகசுந்தரம் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**இயந்திரம் மூலம் பருத்தி சேகரிப்புச் செயல் விளக்கம்**

வந்தவாசியை அடுத்த இளங்காடு கிராமத்தில் பருத்திச் செடியிலிருந்து இயந்திரம் மூலம் பருத்தியை சேகரிக்கும் செயல் விளக்கம் விவசாயிகளுக்கு அண்மையில் செய்து காண்பிக்கப்பட்டது. கோயம்புத்தூர் சிமா பருத்தி அபிவிருத்தி, ஆராய்ச்சிக் கழகம் சார்பில் இந்த செயல்விளக்கம் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்கு சிமா நிறுவன விழுப்புரம் பகுதி நிர்வாகி ஆர்.கோவிந்தராஜ் தலைமை வகித்தார். தலைமை அலுவலக ஆராய்ச்சி மேலாளர் வி.முத்துசாமி, பொறியாளர்கள் ஆர்.எம்.குருசங்கர், எஸ்.எஸ்.ராமன் ஆகியோர் செயல்விளக்கம் செய்து காண்பித்தனர். இதில் இளங்காடு, பொன்னூர், தண்டலம், மருத்துவாம்பாடி, கயநல்லூர், குப்பம் உள்ளிட்ட பல்வேறு கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் பங்கேற்றனர்.

**உரம் தயாரிப்பு பணிகள்: ஆட்சியர் ஆய்வு**

க.பரமத்தி ஊராட்சி செம்மாண்டாம்பாளையம் கிராமத்தில் ஊரக வளர்ச்சித்துறை மூலம் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் உரங்கள் தயாரிக்க மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சியர் ச. ஜெயந்தி அண்மையில் ஆய்வு செய்தார்.கரூர் மாவட்டம், செம்மாண்டாம்பாளையத்தில் ஊராட்சிக்கு சொந்தமான இடத்தில் நடந்து வரும் திடக்கழிவு மேலாமைத் திட்டத்தில் ரூ. 1 லட்சத்து 37 ஆயிரத்தில் நடந்து வரும் பணிகளை மாவட்ட ஆட்சியர் ச. ஜெயந்தி பார்வையிட்டார். பின்னர் அவர் கூறியதாவது:மாவட்டத்தில் 22 ஊராட்சிகளில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் மேற்கொள்ள நடத்து வரும் பணிகள் முழு வீச்சில் நடந்து வருகின்றன. உரங்கள் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு குறைந்த விலையில் விற்கப்படும். இந்த உரம் விளைச்சலை அதிகரித்து, விவசாயிகளுக்கு பயன் தரும். உரம்

விற்பனை மூலம் ஊராட்சிக்கும் வருவாய் கிடைத்திடும்.க.பரமத்தி ஊராட்சியில் தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின்கீழ் ரூ. 5 லட்சம் மதிப்பில் 265 பழ வகை மரக்கன்றுகள் நடப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. இதுபோல், மற்ற ஊராட்சிகளிலும் ஊராட்சிக்கு சொந்தமான காலி இடங்களில் மரக்கன்றுகள் நட்டு பராமரிக்க வேண்டும். இத்திட்டத்திற்காக ஒவ்வொரு ஊராட்சிக்கும் தளவாட பொருள்கள் வாங்க ரூ. 25 ஆயிரம் வழங்கப்படுகிறது என்றார்.ஆய்வின்போது, க.பரமத்தி ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர்கள் முரளிகண்ணன், புவனேஸ்வரி அரவக்குறிச்சி வட்டாட்சியர் உதயகுமார் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

**விவசாய உறுப்பினர்களுக்கான ஆய்வுக் கூட்டம்**

நாகப்பட்டினம் மாவட்ட வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமைத் திட்ட அனைத்து வட்டார விவசாய உறுப்பினர்களுக்கான ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் சு. பழனிசாமி தலைமையில் திங்கள்கிழமை நடைபெற்றது.நாகப்பட்டினம் மாவட்டத்தில் மாநில விரிவாக்கத் திட்டங்களின் உறுதுணை சீரமைப்புத் திட்டத்தின் கீழ் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமைத் திட்டம் 2007 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த திட்டத்தின் கீழ் 2015-16 ஆம் ஆண்டுக்கான செயல்திட்டம் குறித்து இந்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.கூட்டத்தில், விவசாயிகளுக்கான பயிற்சி செயல்விளக்கம், கண்டுணர்வு சுற்றுலா, விவசாயிகள் விஞ்ஞானிகள் கலந்துரையாடல், பண்ணைப்பள்ளி ஆகிய விவசாயிகள் சார்ந்த திட்டங்கள் குறித்து விளக்கப்பட்டது. மேலும், இந்த திட்டத்தின் சார்புடைய அனைத்து துறைகளுக்கும் தேவைப்படும் நிதி மற்றும் அதை திறம்பட செயல்படுத்த வேண்டிய வழிமுறைகள் குறித்த விளக்கம் அளிக்கப்பட்டது.மேலும், நிதி கிடைத்ததும் ஒவ்வொரு வட்டாரத்திலும் உள்ள விவசாயிகள் ஆலோசனைக்குழு மற்றும் வட்டார தொழில்நுட்பக் குழு உறுப்பினர்களைக் கொண்டு கூட்டம் நடத்தி, வட்டாரத்திற்கு

தேவைப்படும் மற்றும் அவசியம் செயல்படுத்தப்பட வேண்டிய திட்டங்களை தீர்மானம் செய்து நிறைவேற்ற ஆலோசனை வழங்கப்பட்டது.மாவட்ட விவசாயிகள் ஆலோசனைக் குழு மற்றும் மேலாண்மைக் குழுவை உடனே கூட்டி வட்டாரங்களில் செயல்படுத்த வேண்டிய திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்கி திட்ட இயக்குநர் தீர்மானம் நிறைவேற்ற அறிவுறுத்தப்பட்டது. மேலும், தீர்மானங்களை வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமைத் திட்டத் தலைவர் முன்னிலையில் நடத்தப்படும் ஆட்சிமன்றக் குழுவில் ஒப்புதல் பெற்று அனைத்து திட்டங்களையும் உடனடியாக செயல்படுத்தவும் அறிவுறுத்தப்பட்டது.கூட்டத்தில் வேளாண்மை இணை இயக்குநர் (பொ) டி. கணேசன், வேளாண்மை துணை இயக்குநர் கு. விஜயகுமார் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

தினகரன்

**பட்டுக்கூடு விற்பனையில் முன்னிலை வகிக்கும் தர்மபுரி**

தர்மபுரி மாவட்டத்தில், 80 சதவீதம் விவசாயம் சார்ந்த தொழில்களே செய்யப்படுகிறது. பட்டுக்கூடு உற்பத்தியில், தர்மபுரி மாவட்டம் முன்னோடியாக விளங்குகிறது. 2 ஆயிரம் ஏக்கரில் மல்பேரி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தர்மபுரி நான்கு ரோட்டில் தமிழக அரசின் பட்டுக்கூடு ஏல அங்காடி உள்ளது. இங்கு தினசரி 4 டன் பட்டுக்கூடு விற்பனை செய்யப்படுகிறது.ஈரோடு, கோவை, திண்டுக்கல், மதுரை, வேலூர், திருவண்ணாமலை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களிலிருந்து சுழற்சி முறையில் விவசாயிகள் பட்டுக்கூடு கொண்டு வந்து அங்காடியில் விற்று செல்கின்றனர். விற்பனை செய்யப்பட்ட 2 மணி நேரத்தில் பணம் பட்டுவாடா செய்யப்படுகிறது. தர்மபுரி பட்டுக்கூடு அங்காடியில் சரியான விலை, உடனுக்குடன் பணம் பட்டுவாடா செய்யப்படுவதால், விவசாயிகள் விரும்பி வருகின்றனர்.

இதுகுறித்து டான்சில்க் தலைவர் மணிவண்ணன் கூறுகையில், காஞ்சிபுரம் தமிழ்நாடு கூட்டுறவு பட்டு உற்பத்தியாளர்கள் இணையத்தில் (டான்சில்க்) சரியான விலை தற்போது கொடுப்பதால், பட்டு வளர்ப்பில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். ஒரு கிலோ கச்சா பட்டு நூல் ரூ.2,500க்கு நேற்று விற்பனை செய்யப்பட்டது. கச்சா பட்டுநூல் உற்பத்தி செய்யும் நூற்பாலைகள் தர்மபுரி நகரத்தை சுற்றியே அதிகம் உள்ளன. மதிகோன்பாளையம், காமாட்சியம்மன் தெரு, பழைய தர்மபுரி உள்ளிட்ட இடங்களில் 75 உற்பத்தி ஆலைகள் உள்ளன. இந்த ஆலைகளில் இருந்து காஞ்சிபுரம் டான் சில்கிற்கு தினசரி 300 கிலோ கச்சா பட்டு நூல் செல்கிறது என்றார்.

**கால்நடைகளுக்கு மலடு நீக்க முகாம்**

பொன்னமராவதி, : பொன்னமராவதி அடுத்த குமாரப்பட்டி கிராமத்தில் அட்மா திட்டத்தின் கீழ் வேளாண் துறையும், கால்நடை பாரமரிப்புத் துறையும் இணைந்து கால்நடைகளுக்கு செயற்கை கருவூட்டல் மற்றும் மலடு நீக்க முகாமை நடத்தின.முகாமிற்கு பொன்னமராவதி வட்டார வேளாண் உதவி இயக்குநரும், அட்மா திட்ட ஒருங்கிணைப்பாளருமான ஜெயபாலன், பொன்னமராவதி கால்நடை மருத்துவர் நவநீதகிருஷ்ணன் ஆகியோர் தலைமை வகித்தனர். ஊராட்சி தலைவர் பழனிச்சாமி, அட்மா திட்ட ஆலோசனைக் குழு உறுப்பினர் ராஜமாணிக்கம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் குமாரப்பட்டி, திருக்களம்பூர், கருப்புக்குடிப்பட்டி கிராமங்களைச் சேர்ந்த கால்நடை விவசாயிகள் அழைத்து வந்த 100க்கும் மேற்பட்ட கால்நடைகளுக்கு செயற்கை முறையில் கருவூட்டல், மலடு நீக்கம், குடற்புழு நீக்கம் ஆகியவற்றுக்கான சிகிச்சைகளை கால்நடை மருத்துவர்கள் டாக்டர் நவநீதகிருஷ்ணன், டாக்டர் சண்முகம், முதுநிலை கால்நடை மேற்பார்வையாளர் கருப்பையா ஆகியோர் மேற்கொண்டனர். இதனைத் தொடர்ந்து, முகாமில் பங்கேற்ற

கால்நடை வளர்ப்போருக்கு தாது உப்பு கலவை, கோ 4 ரக தீவனப்புல் கரணை ஆகியன இலவசமாக வழங்கப்பட்டன. முகாம் ஏற்பாடுகளை அட்மா திட்ட உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் ராஜீ, பிரியங்கா, அட்மா திட்ட உழவர் நண்பன் அடைக்கலம் ஆகியோர் செய்திருந்தனர். முன்னதாக, கணேசன் வரவேற்றார். முடிவில் அட்மா தொழில்நுட்ப மேலாளர் தேவி நன்றி கூறினார்..

**ஆட்டுக்கிடை போடுவதால் வயல்களுக்கு இயற்கை உரம் தாராளம்**

வேதாரண்யம், : வயல்களுக்கு இயற்கை உரத்திற்காக ஆடு, மாடுகளை வைத்து விவசாயிகள் கிடைபோடுவதால் இயற்கை உரம் கிடைப்பதாகவும், அதிகளவில் ரசாயன உரங்கள் தேவையில்லை எனவும் விவசாயிகள் தெரிவித்தனர்.வேதாரண்யம் தாலுக்காவில் பிராந்தியங்கரை, மூலக்கரை, கரியாப்பட்டினம், உம்பளச்சேரி உள்ளிட்ட ஆற்றுப்பாசன பகுதியில் 5 ஆயிரம் ஏக்கரில் ஒரு போகசாகுபடி நடைபெறுகிறது. இப்பகுதி விவசாயிகள் ரசயான உரங்களை நம்பியே பெரும்பாலும் விவசாயம் செய்கின்றனர். அதிகப்படியான ரசயான உரமிடுவதால் நிலங்கள் உப்புத்தன்மை உள்ளதாக மாறிவிடுகிறது. உப்பு தன்மை காரணமாக நாளடைவில் மகசூல் குறைந்து விடுகிறது. நிலத்தின் இந்த உப்புதன்மையை மாற்றவும், ரசயான உரத்திலிருந்து இயற்கை உரத்திற்கு மாறவும் விவசாயிகள் தங்கள் வயல்களில் ஆடு, மாடுகளை கொண்டு கிடை வைக்கின்றனர். இப்பகுதியில் 10க்கும் மேற்பட்டவர்கள் ஒவ்வொருவரும் நூற்றுக்கணக்கான ஆடுகள், மாடுகளை சேர்த்து பகல் முழுவதும் அவற்றை மேய்த்து இரவில் விவசாயிகளின் வயல்களில் கிடை போடுகின்றனர்.இதனால் அவற்றின் சாணங்கள் வயல்களுக்கு இயற்கை உரமாக மாறுகிறது. ஒருநாள் இரவு கட்டுவதற்கு ஒரு ஆட்டிற்கு ரூ.1ம், மாட்டிற்கு ரூ.இரண்டு ரூபாயும் கூலியாக பெறுகின்றனர். கிடைகட்டி முடித்தவுடன் வயலில் கோடை உழவையும் விவசாயிகள் மேற்கொள்கின்றனர். இந்த கிடைகட்டுவதினால் இயற்கையான உரம்

கிடைப்பதாகவும், அதிகப்படியான ரசயான உரங்களை இட தேவையில்லை எனவும் விவசாயிகள் தெரிவித்தனர். இந்த ஆடு, மாடுகளை சேர்த்து கிடைகட்டுபவர்கள் ஆட்டின் உரிமையாளரிடம் ரூ.50ம், மாட்டிற்கு ரூ.100ம் பெற்றுக்கொள்கின்றனர். இதனால் ஆடு, மாடு வைத்திருப்பவகளுக்கு ஆறு மாதம் தீவன செலவும், அதன் பராமரிப்பு நேரமும் மிச்சப்படுகிறது. இந்த கிடைசேர்க்கும் தொழிலாளிகள் ஆறு மாதத்திற்கு தங்கள் வீடுகளை மறந்து கயிற்று கட்டிலில் கீற்றினால் குடியில் அமைத்து ஆடு, மாடுகளை கொண்டு செல்லும் இடங்களுக்கு எடுத்துச் சென்று அதிலேயே தங்கி விடுகின்றனர். ஆடம்பரமான வீடுகளை கட்டி சொகுசாக வாழும் இக்காலத்தில் வருமானத்திற்காகவும், விவசாயிகளின் நன்மைக்காகவும் தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்து கொண்டு நாடோடிகளாக வாழ்க்கை நடத்தும் இந்த கிடைகட்டும் விவசாயிகள் வாழ்க்கை வித்தியாசமான ஒன்று தான்.

## 50 சதவிகித மானியத்தில் பசுந்தாள் உரப்பயிர்கள்

தரங்கம்பாடி, : கோடை மழையை பயன்படுத்தி குறுவைப் பயிர் செழிப்போடு வளர 50 சதவிகித மான்யத்தில் வழங்கப்படும் பசுந்தாள் உரத்தை வாங்கி பயனடையுமாறு விவசாயிகளை வேளாண் அதிகாரி கேட்டுக்கொண்டுள்ளார். செம்பனார்கோவில் வட்டார வேளாண் உதவி இயக்குனர் வெற்றிவேலன் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: நிலங்களுக்கு இயற்கை உரங்கள் கிடைக்காத நிலையில் விவசாயிகள் பசுந்தாள் உரப் பயிர்களை பயிரிட்டு வயல்களை வளமாக்கிக்கொள்ள வேண்டும். தற்போது பொறையார், திருவிளையாட்டம், செம்பனார்கோவில், ஆக்கூர் ஆகிய வேளாண்மை விரிவாக்க மையங்களில் தக்கைப் பூண்டு என்ற பசுந்தாள் உரம் 50 சதவிகித மான்யத்தில் விநியோகிக்கப்பட்டு வருகிறது. இதற்கு போதிய ஈரப்பதம் மண்ணில் இருந்தால் போதும், எல்லா பருவங்களிலும் இதை

விதைக்கலாம். களர் உவர் தன்மையை தாங்கியும் வளரும். 15 முதல் 20 நாட்களுக்கு ஒருமுறை நீர்பாய்ச்சினால் நல்ல பசுந்தாள் மகசூல் கிடைக்கும். விதைத்த 45 நாட்களிலிருந்து 60 நாட்களுக்குள் மண்ணில் மடித்து உழுதுவிட வேண்டும். நல்ல மகசூல் கிடைக்க விவசாயிகள் இந்த பசுந்தாள் உரப் பயிர்களை வாங்கி பயன்பெறலாம் என்று வேளாண் அதிகாரி வெற்றிவேலன் கேட்டுக்கொண்டுள்ளார்.

**கேரளாவில் சிக்கன் விலை ‘கிடு கிடு’ உயர்வு: 1 மாதத்தில் இரு மடங்கு அதிகரிப்பு**




திருவனந்தபுரம்: கேரளாவில் கோழி இறைச்சிக்கு எப்போதுமே அதிக டிமாண்ட் உண்டு. ஓணம், சித்திரை விஷு, கிறிஸ்துமஸ் உட்பட பண்டிகை நாட்களில் கோழி இறைச்சிக் கடைகளில் கூட்டம் அலைமோதும். கேரளாவில் கறிக்கோழி உற்பத்தி மிகவும் குறைவு என்பதால் பெரும்பாலும் தமிழ்நாட்டிலிருந்து தான் கறிக்கோழிகள் கேரளாவுக்கு கொண்டு செல்லப்படுகிறது. கடந்த மாதம் வரை கேரளாவில் ஒரு கிலோ கறிக்கோழி (உயிருடன்) விலை 70 முதல் 85 ரூபாயாக இருந்தது. ஈஸ்டர் பண்டிகையின் போதும் கிட்டத்தட்ட இதே விலை தான் இருந்தது. இந்நிலையில் கடந்த 10 நாட்களாக கேரளாவில் கறிக்கோழி விலை கிடுகிடுவென உயர்ந்து வருகிறது. கடந்த 1ம் தேதி 1 கிலோ ரூ.120 ஆகவும், 3ம் தேதி ரூ.140 ஆகவும் உயர்ந்தது. சில வட மாநிலங்களில் மாட்டிறைச்சிக்கு தடை விதித்திருப்பதால் அதற்குப்

பதிலாக அங்குள்ள மக்கள் கோழி இறைச்சியை நாட தொடங்கியுள்ளனர். மேலும் அதிக வெயில் காரணமாக கோழி இறப்பு உயர்ந்துள்ளதும், தமிழ்நாடு உட்பட சில மாநிலங்களில் இருந்து இறைச்சிக் கோழிகள் வட மாநிலங்களுக்கு அனுப்பப்படுவதால் கேரளாவுக்கு இறைச்சிக் கோழி வரத்து குறைந்து விட்டது. இது தான் விலை உயர்வுக்கு முக்கிய காரணம் என கோழி வியாபாரிகள் கூறுகின்றனர்.

## அனைத்து விவசாயிகளுக்கும் சொட்டுநீர் பாசனத்திற்கு மானியம் வழங்க வேண்டும்

ஈரோடு, : தமிழகத்தில் அனைத்து பகுதி விவசாயிகளுக்கும் சொட்டுநீர் பாசனத்திற்கு மானியம் வழங்க வேண்டும் என்று பாமக ஒன்றிய பொதுக்குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பாட்டாளி மக்கள் கட்சியின் பெருந்துறை வடக்கு ஒன்றிய பொதுக்குழு கூட்டம் காஞ்சிக்கோவில் ஸ்ரீதங்கமகாலில் நடந்தது. ஒன்றிய செயலாளர் ராசு தலைமை தாங்கினார். ஒன்றிய துணைச் செயலாளர் அண்ணாதுரை வரவேற்றுப் பேசினார். இதில் சிறப்பு அழைப்பாளராக மாநில துணை பொதுச்செயலாளர் ஆறுமுகம் கலந்து கொண்டு கோரிக்கைகளை விளக்கி பேசினார். இந்த கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்: மத்திய அரசின் ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தில் கிராம ஊராட்சிகள் சம்பந்தமான வேலைகளை செய்யாமல் மத்திய அரசின் ஊதியத்தை குறைக்காமல் அந்தந்த பகுதி விவசாயிகளுக்கு விவசாயம் செய்ய இந்த திட்டத்தை பயன்படுத்திட மத்திய அரசு உத்தரவிட வேண்டும். வறட்சி நிறைந்த தமிழகத்தில் சொட்டுநீர் பாசனத்திற்கு தமிழக அரசு மானியம் அறிவித்தது. ஆனால் கடந்த 4 ஆண்டாக மானியத்தை விவசாயிகளுக்கு தராமல் உள்ளனர். விவசாயத்திற்கு போதிய தண்ணீரும் இல்லை. தமிழகத்தில் அனைத்து பகுதி விவசாயிகளுக்கும் சொட்டுநீர் பாசனத்திற்கான மானியத்தை உடனடியாக வழங்கிட வேண்டும்.

பள்ளபாளையம் பேரூராட்சிக்குட்பட்ட இரட்டை வாய்க்கால் பகுதியில் உள்ள வீடுகளிலும் மக்கள்தொகை கணக்கெடுப்பு நடத்தி ஆதார் அட்டை வழங்க வேண்டும், பொண்ணாண்டவலசு காலனி பகுதியில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கழிப்பிடம், சாக்கடை வசதி மற்றும் கான்கிரீட் தளம் அமைத்துக் கொடுக்க வேண்டும், பெத்தாம்பாளையம் ரோஜாநகரில் 90க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகிறார்கள். இந்த பகுதியில் குடிநீர் கிடைக்காமல் மக்கள் அவதிப்பட்டு வருகிறார்கள். அந்த பகுதி மக்களுக்கு குடிநீர் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும், கொண்டையன்காட்டுவலசு பகுதியில் பொது கழிப்பிடம் கட்டிக் கொடுக்க வேண்டும், அரசங்காட்டில் சாக்கடை வசதி, கான்கிரீட் சாலை வசதி, குடிநீர் வசதி செய்து கொடுக்க வேண்டும் என்பன உட்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. இந்நிகழ்ச்சியில் மாநில துணை தலைவர் பரமசிவம், மாவட்ட செயலாளர் முத்துக்குமார், மாநில இளைஞர் சங்க துணை செயலாளர் வேலுச்சாமி, மாநில சிறுபான்மை பிரிவு செயலாளர் ஷேக்முகைதீன், மாநில செயற்குழு உறுப்பினர் ராஜேந்திரன், மாவட்ட இளைஞர் சங்க தலைவர் சந்திரசேகரன், காஞ்சிக்கோவில் பேரூர் செயலாளர் தங்கவேல், ஒன்றிய தலைவர் அருணாசலம், பள்ளபாளையம் பேரூர் செயலாளர் கோவிந்தசாமி, வன்னியர் சங்க ஒன்றிய தலைவர் பழனிச்சாமி உட்பட பலர் கலந்து கொண்டனர். முடிவில் ஒன்றிய பொருளாளர் சசிகலா நன்றி கூறினார்.

**மகசூலை அதிகரிக்க சாகுபடிக்கு முன் பாசன நீர் ஆய்வு செய்வது அவசியம்**

சேதுபாவாசத்திரம், : விவசாயத்தில் மகசூலை அதிகரிக்க பாசன நீர் ஆய்வு செய்வது அவசியம் என்று விவசாயிளுக்கு யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது. சேதுபாவாசத்திர வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் பெரியசாமி வெளியிட்டுள்ள அறிக்கை:பாசன நீரில்

உப்புத்தன்மை, களர்தன்மை என இருவகை உள்ளது. பாசனநீரில் கரையும் தன்மையுள்ள கால்சியம், மெக்னீசியம், சோடியம், பொட்டாசியம் தாதுக்களின் குளோரைடு, சல்பேட் அயனிகள் அதிகளவில் இருந்தால் உப்பு தன்மையும், அதேபோன்று சோடியம் கார்பனேட், சோடியம்பை கார்பனேட், மெக்னீசியம் கார்பனேட் உப்புகள் அதிகமிருந்தால் களர் தன்மையும் ஏற்படுகிறது. இதை கண்டறிய ஆய்வு செய்வது அவசியமாகும். நீர் மாதிரி எடுப்பதற்கு சுத்தமான கண்ணாடி பாட்டில் அல்லது பாலித்தீன் பாட்டிலை உபயோகிக்க வேண்டும். மோட்டார் இணைக்கப்பட்ட கிணற்றில் 10 முதல் 30 நிமிடம் தண்ணீரை ஓடவிட்டு அந்த தண்ணீரிலேயே பாட்டிலை கழுவி மாதிரிக்காக அரை லிட்டர் தண்ணீர் எடுக்க வேண்டும். கண்மாய், குளங்களின் நீர் மாதிரி எடுக்கும்போது பாட்டிலின் வாயை கைவிரலால் மூடி மூழ்கடித்து மாதிரி எடுக்க வேண்டும். கமலை உள்ள கிணற்றில் ஒரு கமலை நீரில் மாதிரிக்காக நீர் சேகரிக்க வேண்டும். கயிறு கட்டி இறைக்கும் கிணற்றில் 2 அல்லது 3 வாலி தண்ணீர் இறைத்து பெரிய வாலி சேகரித்து மாதிரி எடுக்க வேண்டும். காலை 9 மணிக்குள் நீர் மாதிரி சேகரிக்க வேண்டும். நீர் மாதிரி எடுத்த பாட்டில்களை கண்டிப்பாக வெயிலில் வைக்கக்கூடாது. தஞ்சை மாவட்டத்தை பொறுத்தவரையில் ஆடுதுறை நெல் ஆராய்ச்சி நிலையம் மற்றும் மண், நீர் ஆராய்ச்சி நிலையம் (தஞ்சாவூர்) காட்டுத்தோட்டம் ஆகிய இடங்களில் ஆய்வு செய்யப்படுகிறது.நீர் மாதிரி அனுப்பும்போது விவசாயியின் பெயர், கிராமம் மற்றும் முகவரி விவரம், கிணறு இருக்கும் நிலத்தின் சர்வே எண், திறந்த வெளி கிணறா, ஆழ்குழாய் கிணறா, குளமா, கண்மாயா, தண்ணீர் பாயும் நிலத்து மண்ணின் ஆய்வு விவரம் ஆகிய விவரங்கள் அனுப்ப வேண்டும்.

**திருவிடைமருதூர் பகுதியில் எள் சாகுபடியில் விவசாயிகள் மும்முரம்**

திருவிடைமருதூர், : வறட்சியை தாங்கி வளரக்கூடிய எள்ளை திருவிடைமருதூர் மற்றும் சுற்றுபுற பகுதிகளில் விவசாயிகள் ஆர்வத்துடன் சாகுபடி செய்ய தொடங்கியுள்ளனர்.திருவிடைமருதூர் மற்றும் திருப்பனந்தாள் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் வறட்சியை தாங்கி வளரக் கூடிய எள்ளை ஆர்வத்துடன் சாகுபடி செய்ய தொடங்கியுள்ளனர். கடுமையான மின்வெட்டு காரணமாக கோடையில் நிலத்தடி நீர்மூலம் பயிரிடப்பட்டு வந்த நெற்பயிரை கைவிட்டு 90 நாள் மட்டுமே வயதுடைய எள்ளை பயிரிட்டு வருகின்றனர். இப்பயிருக்கு இரண்டு முறை மட்டுமே தண்ணீர் பாய்ச்சினால் போதும் என்ற நிலையாலும், விவசாயத்திற்கு ஆள்பற்றாக்குறை ஏற்பட்டு வரும் நிலையில் இந்த எள் பயிர் பாரமரிப்பிற்கு மிக மிக குறைவான கூலி ஆட்கள் தேவைப்படும் நிலையால் திருவிடைமருதூர் மற்றும் திருப்பனந்தாள் ஒன்றிய பகுதிகளில் உள்ள கிராம பகுதிகளில் சுமார் 2ஆயிரம் ஏக்கருக்கு மேல் இந்த ஆண்டில் எள் சாகுபடி செய்துள்ளனர். மேலும் தற்போது தொடர்ந்து பெய்த கோடைமழையால் நிலத்தின் ஈரத் தன்மையை கொண்டு கோடை உழவு செய்து எள் தெளிக்க தொடங்கியுள்ளனர். எள் சாகுபடி மேலும் ஆயிரத்திற்கு மேற்பட்ட ஏக்கர் பரப்பளவில் அதிகரித்து வருகிறது. விதை, உழவு மற்றும் அறுடை என மொத்தத்தில் ஏக்கருக்கு ரூ. 4ஆயிரம் முதல் ரூ. 5ஆயிரம் வரை மட்டுமே செலவாகிறது என்றும், பூச்சிதாக்குதல் அதிகம் இல்லாத எள் பயிருக்கு செயற்கை உரத் தேவையும் தேவையில்லை எனக் கூறும் விவசாயிகள் அறுவடை மூலம் 2குவிண்டால் முதல் 3 குவிண்டால் வரை எள் கிடைப்பதாக தெரிவிக்கின்றனர். ஏற்கனவே குவிண்டால் ரூ. 6 ஆயிரம் விற்று வந்த எள் மூட்டை தற்போது ரூ. 10ஆயிரத்திற்கும் மேல் விலை ஏறியுள்ளது. இதில் செலவு போக ஏக்கருக்கு ரூ. 40 ஆயிரத்திற்கும் மேல் 90 நாளில் வருமானம் கிடைப்பதாக விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர்.

விலை ஏற்றத்தின் காரணமாக வரும் ஆண்டுகளில் ஏராளமான விவசாயிகள் பல ஆயிரம் ஏக்கரில் பயிரிட முன்வருவார்கள் என வேளாண்மைதுறை அலுவலர்கள் தெரிவிக்கின்றனர்.